நாள்: 02.12.2025.
O.S. No. 02 /2025
பெயர்: சுப்ரமணியன், த/பெ. குருசாமி
பி.வா.சா.1

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

வா.சா.ஆ.1 ஆவணமான 26.07.2005-ம் தேதியிட்ட ஆவணத்தை நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அப்போதைய செயலாளர் சங்கரன் என்பவரும் பதவி துறப்பு செய்து கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு பதவியை விட்டுக்கொடுத்ததற்காக வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பள்ளிக்கூடம், சத்துணவு மையம் இருக்கும் இடத்தை மட்டும் குத்தகைக்கு விட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.300/- அளிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 31.05.2006-ம் தேதி 10 மாதங்களுக்கு ரூ.3000/-ம் வாடகை கொடுத்து அது வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின்பக்கம் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒப்பந்த காலம் ஒரு ஆண்டு என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் வாடகை பாக்கியை செலுத்துவதிலிருந்து தப்பிக்க வேண்டி வா.சா.ஆ.1 ஆவணம் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் பள்ளியில் நிர்வாக உரிமையை மாற்றம் செய்ய சம்மதித்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமும், பி.வா.சா.ஆ.1 ஆவணமும் ஒரே நேரத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நிர்வாக பொறுப்பை ஒப்படைப்பதில் எனக்கோ எனது குடும்பத்தாருக்கோ எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படைமயில்தான் பள்ளிக்கு உரிமை ஏற்படுவதாக கூறுகிறேன் என்றால் சரிதான். பள்ளியின் சொத்து பதிவேட்டில் அடிமனை, பள்ளிக்கூட கட்டிடங்கள் எனக்கு சொந்தமானதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி மற்றும் வாதியின் தகப்பனாரிடம் நான் வாடகைதாரர் என்ற முறையில் தான் எனக்கு கல்வி துறையால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். எனது முதல்விசாரணை பிரமான வாக்குமூலத்தில் ஒன்பதாவது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள ந.க.எண்.5443 / 5 / அ 2. 26.10.2005-ம் தேதியிட்ட செயல்முறை ஆணையை நான் இவ்வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னை வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் நன்னிலம் உதவி தொடக்க கல்வி அலுவலர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். என்னை விசாரித்த அலுவலர் பெயர் முருகபாஸ்கர் என்றால் சரிதான். வாதி கொடுத்த புகாரில் நான் வாடகை பாக்கி வைத்துள்ளதாகவும், அதனால் வழக்கு சொத்தை வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், வாடகை பாக்கியான ரூ.65,400/- யை செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள விபரங்களை

குறிப்பிட்டு நான் 01.11.2023-ம் தேதி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் படித்து காண்பிக்கப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் 12-வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் படித்து காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றாலும் அதில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் எழுதிக்கொடுத்தபடி இடத்தை காலி செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இடத்தை அபகரிக்க வேண்டும் என்று பள்ளியின் பெயரில் தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 07.08.2024-ம் தேதியிட்ட கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அந்த கடிதம் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.15 ஆவணத்தில் நான் எழுதிக் கொடுத்துள்ளபடி வாதி சத்துணவுகூடம், சமையல்கூடம் கட்டிக்கொடுக்கவில்லை என்றாலும் அதனால் நானே கட்டிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்தவரை நான் வாடகைதாரர் மட்டுமே என்றால் சரியல்ல. நான் வாடகை செலுத்தாததால் வாடகை ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது ஊரில் எனக்கு வேறு இடங்கள் உரிமையாக இருந்தும், வேண்டுமென்றே வழக்கு சொத்தை காலி செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பள்ளி நிர்வாகம் மட்டும் தான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றாலும் பள்ளிக்கூடம் உள்ள இடம் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. பள்ளியின் அடிமனை பள்ளிக்கு சொந்தமானது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.12.02 23:12:03 +0530